## "நீதிமன்ற உத்தரவையே மதிக்கவில்லை; வாட்ஸ் அப்பில்

# லஞ்சப் புகார் வந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப் போறீங்க? மக்களை ஏமாற்ற வேண்டாம்"!

## லஞ்ச ஒழிப்புத் துறைக்கு நீதிபதி கடும் கண்டனம்!

மதுரை, ஆக.10-

லஞ்ச புகார் தொடர்பாக நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தே அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. இதில் வாட்ஸ் அப்பில் புகார் வந்து என்ன நடவடிக்கை எடுக்க போகிறீர்கள், மக்களை ஏமாற்ற வேண்டாம் என லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உயர்நீதிமன்ற துறை கிளை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ராமநாதபுரத்தை சேர்ந்த கலந்தர் ஆசிக், உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு: ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி பேரூராட்சியில் நல திட்டப்பணிகளுக்கான நிதியை பேரூராட்சி தலைவர் முறைகேடு செய்துள்ளார்.

பொய்யான வரவு, செலவு கணக்குகளை பேரூராட்சி மன்ற கூட்டத்தில் வைத்து அனுமதி பெற்றுள்ளார். தொண்டி பேரூராட்சியின் தலைவர் மற்றும் துணை தலைவர் இருவரும் பெண்கள் என்பதால் இவர்களின் குடும்ப உறுப்பினர்களின் தலையீடு அதிகம் இருப்பதே ஊழல்கள் அதிகம் நடைபெற காரணமாக உள்ளது. இதுகுறித்து உரிய ஆவணங்களுடன் லஞ்ச ஒழிப்புத்துறை மற்றும் பேரூராட்சி இணை இயக்குநரிடம் புகார் அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, இதுதொடர்பாக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன். மனு விசாரணையின் போது, பேரூராட்சிகளுக்கான இணை இயக்குநர் சம்பவம் குறித்து விசாரணை செய்து தொண்டி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த 6 செயல் அலுவலர்களுக்கு குற்ற குறிப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இதுகுறித்து லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணைக்காக லஞ்ச ஒழிப்பு கண்காணிப்பாளருக்கும் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என அறிக்கை தாக்கல் செய்தார்.

இதனை பதிவு செய்த நீதிமன்றம், பேரூராட்சி இயக்குநர் குறிப்பிட்டுள்ள 6 செயல் அலுவலர்கள் மீது லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தது. ஆனால் இது வரை லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் எவ்வித விசாரணையும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, லஞ்ச ஒழிப்பு துறையின் தென் மண்டல காவல் துறை கண்காணிப்பாளர் மீது நீதிமன்ற அவமதிப்பின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி பி.புகழேந்தி, "நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும் இதுவரை ஏன் லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை நடத்தவில்லை. இதுபோன்ற வழக்குகளில் ஒரு மாவட்டத்திற்கு ஒரு பேரூராட்சி செயல் அலுவலர் மீது வழக்கு போட்டாலே பேரூராட்சி முறைகேடுகள் தடுக்கப்படும். ஆனால் இதுவரை விசாரணையே செய்யவில்லை. லஞ்ச ஒழிப்புத் துறை அரசு அதிகாரிகள் மீது துறை ரீதியான விசாரணையின் போது ஒவ்வொரு முறையும் சம்பந்தப்பட்ட துறையிலும் அனுமதி வாங்க வேண்டும் என்று கூறியே விசாரணையை தாமதம் செய்கிறீர்கள்.

இதனால் குற்றவாளிகள் தப்பித்து விடுகிறார்கள். நீங்கள் யாரை ஏமாற்ற இந்த வேலை செய்கிறீர்கள் எனத் தெரியவில்லை. லஞ்சத்தை ஒழிப்பதற்கு அரசு வாட்ஸ் அப் நம்பரை அறிமுகப்படுத்தி உள்ளது. அரசு ஊழியர்கள் லஞ்சம் கேட்டால் வாட்ஸ் அப்பில் புகார் கொடுக்கலாம் என தெரிவித்துள்ளார்கள். நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தே நடவடிக்கை எடுக்கவில்லை. வாட்ஸ் அப்பில் புகார் வந்து என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள். மக்களை ஏமாற்ற வேண்டாம். இந்த வழக்கில் லஞ்ச ஒழிப்புத் துறை தரப்பில் விரிவான பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும்" என உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தார்.

## சாதாரண ஏழை, எளிய மக்களையும் கடுமையாக பாதிப்பதாக அமையும்!

# சிறுபான்மையினரின் நலன்களைக் குறி வைப்பதே FCRA திருத்த மசோதாவின் நோக்கம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக.10-

திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை வருமாறு:

இந்தியாவில் உள்ள தொண்டு நிறுவனங்கள், அமைப்புகள் (NGOs) வெளிநாடுகளிலிருந்து பெறும் நிதியையும், நன்கொடைகளையும் ஒழுங்குபடுத்தவும், கண்காணிக்கவும், ஏற்கெனவே உள்ள வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தில் திருத்த மசோதா (FCRA Amendment Bill) ஒன்று, ஒன்றிய உள்துறை அமைச்சகத்தால் கடந்த மார்ச் மாதத்திலேயே நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. தொடக்கம் முதலே இந்த மசோதாவில் உள்ள ஆபத்தை நாம் சுட்டிக் காட்டி வருகிறோம்.

இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம் சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், தொண்டு நிறுவனங்களைக் குறிவைப்பதேயாகும். ஆனால், சிறுபான்மையினர் நடத்தும் நிறுவனங்கள் மட்டுமல்ல. இந்தியாவில் செயல்பட்டுவரும் மதச்சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் உள்பட பலரையும் கடுமையாகப் பாதிப்பதாகும். மேலும் அதன் விளைவுகள், அந்த தொண்டு நிறுவனங்களை நடத்துவோரை மட்டுமல்ல, அதனால் பலன் அடைந்துவரும் சாதாரண ஏழை, எளிய மக்களையும் கடுமையாக பாதிப்பதாக அமையும்.

**அரசின் பெயரால் அபகரிப்போம் என்பது என்ன நியாயம்?**

எஃப்.சி.ஆர்.ஏ.வில் பதிவைப் புதுப்பிப்பது உள்ளிட்டவற்றைக் கடுமையாக்கி, தங்கள் கையில் கொண்டுவந்துவிட்டு, அப்படி பதிவைப் புதுப்பிக்க முடியாத, தாமதமாகும் நிறுவனங்களில், முன்பு வெளிநாட்டு நிதியில் கட்டப்பட்ட கட்டடங்கள் உள்பட, எல்லாவற்றையும் கபளீகரம் செய்ய முயற்சிக்கிறது பா.ஜ.க.! இதனால், நாடு முழுவதும் எத்தனை பள்ளிகள், மருத்துவமனைகள், ஆதரவற்றோர் இல்லங்களுக்கான கட்டடங்கள் செயல்பட முடியாமல் போகும்? வெளிநாட்டு நிதியில் இனி கட்டடம் கட்டக் கூடாது என்று சொல்வதைக் கூட நாம் கேள்வி எழுப்பலாம் விவாதிக்கலாம். ஆனால், முன்பிருக்கும் கட்டடங்களையும் செயல்பட அனுமதிக்க மாட்டோம்; அவற்றை அரசின் பெயரால் அபகரிப்போம் என்பது என்ன நியாயம்?

இது குறித்து கடந்த ஜூலை 4 அன்று சேலத்தில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக்குழுவிலும், ஒன்றிய அரசின் நோக்கத்தைச் சுட்டிக்காட்டி, இந்தச் சட்ட மசோதா திரும்பப் பெறப்பட வேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம்.

"சில நூறு ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகளை வளர்த்தெடுப்பதில் கிறித்துவ தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பை எளிதில் புறக்கணித்துவிட முடியாது.

இன்றைய ஒன்றிய பி.ஜே.பி. அரசைப் பொறுத்தவரையில் சிறுபான்மை யினத்தவர் மீதான வெறுப்பு எத்தகையது என்பது நாட்டுக்கே தெரிந்த ஒன்றே!

குடியுரிமைத் திருத்தச் சட்டம் 2019 (CAA - Citizenship Amendment Act) மற்றும் என்.ஆர்.சி. (National Register of Citizens) போன்ற சட்டங்களும் இதே நோக்கம் கொண்டவையே!

இந்தியா என்பது ஒரே நாடல்ல - ஒரு துணைக் கண்டம்; பல மாநிலங்கள், பல இனங்கள், பல மொழிகள், பல கலாச்சாரங்கள், பல மதங்கள், தட்ப வெட்ப நிலைகளைக் கொண்டதாகும்.



ஆனால், ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே தேசியம், ஒரே கலாச்சாரம், ஒரே தேர்தல் என்ற நோக்கில் ஹிந்து ராஜ்ஜியம் அமைப்பு என்பதுதான் ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி.யின் இலக்காகும். இந்தக் கொள்கையைக் கொண்ட ஒன்றிய அரசு, சிறுபான்மை மக்களைக் குறி வைத்துத் தக்குதல் நடத்துவது, அவர்கள் கூறும் "தேசியத்திற்கே" ஊறுவிளைவிக்கக் கூடியது என்று இப்பொதுக் குழு திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறது.

வெளிநாடுகளில் இருந்து நிதி உதவி, நன்கொடை பெறுதல் போன்றவற்றிற்குச் சட்ட ரீதியான விதிமுறைகள் ஏற்கெனவே இருக்கத்தான் செய்கின்றன. தவறுகளைக் களைதல் என்ற சாக்கில் உரிமைப் பறிப்பு - கடும் தண்டனைகளும், அச்சுறுத்தலும் ஏன்?

**நியாயமானதும், வரவேற்கத்தக்கதுமாகும்!**

இதன் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்ட சிறுபான்மை மக்களும், பொது நிலையில் உள்ளவர்களும் இந்தச் சட்டத்தை நாடு தழுவிய அளவில் எதிர்த்து வருவது நியாயமானதும், வரவேற்கத்தக்கதுமாகும்.

அதே அளவுகோல், ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார்களுக்கு வெளிநாடுகளிலிருந்து குவியும் நன்கொடைகள், வரவுகளுக்கு உண்டா? என்ற கேள்வி எழுகிறதே - வெளிநாடுகளில் இவர்கள் எப்படியெல்லாம் நிதி திரட்டுகிறார்கள், அதைப்பற்றிய கண்காணிப்புகளும், ஒழுங்குமுறைகளும், வரையறைகளும் இல்லை என்பதிலிருந்தே ஒன்றிய பி.ஜே.பி. அரசு கொண்டு வந்துள்ள இந்த FCRA சட்டத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது.

'பி.எம்.கேர் ஃபண்ட்' என்ற ஒன்றை, ஒன்றிய பி.ஜே.பி. அரசு உருவாக்கி வைத்துள்ளது. இதற்கு வந்து குவியும் நிதிகளுக்குக் கணக்கு வழக்குக் கிடையாது. வெளிப்படைத் தன்மை என்பது இல்லை. சி.ஏ.ஜி. என்ற இந்தியத் தலைமைக் கணக்குக்கு உட்பட்டதும் இல்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கும் (RTI) உட்பட்டதில்லை.

இந்த இலட்சணத்தில், இந்திய ஒன்றிய அரசு சிறுபான்மையினருக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நன்கொடைகளால் நடத்தப்படும் கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அறப்பணிகளை மறைமுகமாக முடக்குவது கண்டிக்கத்தக்கது. கட்சிக்கு அப்பாற்பட்ட முறையில் ஒன்று திரண்டு ஒன்றிய பி.ஜே.பி. அரசின் மதவாதக் கண்ணோட்டத்தோடு கொண்டு வரப்பட்டுள்ள FCRA சட்டத்தை எதிர்த்து முறியடிக்க வேண்டுமாய் இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது" என்ற நமது தீர்மானம், இம் மசோதாவின் உள்நோக்கத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதாகும்.

**ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத்**

ஆர்.எஸ்.எஸ். தான் உலகின் மிகப் பெரிய என்.ஜி.ஓ., என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பெருமை பேசினாரே! அந்த என்.ஜி.ஓ.வின் கணக்கு வழக்கு என்ன? குறைந்தபட்சம் அந்த அமைப்பு பதிவாவது செய்யப்பட்டுள்ளதா? ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத், இதைப் பற்றிக் கேட்டால் என்ன பதில் சொல்கிறார்? "அரசாங்கங்களும், நீதிமன்றங்களும் எங்களை ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக அங்கீகரித்துள்ளன. எனவே, நாங்கள் பதிவு செய்ய வேண்டியதில்லை. பல விஷயங்கள் பதிவு செய்யப்படவில்லை, இந்து தர்மம் கூட பதிவு செய்யப்படவில்லை" என்பது தானே அவரது பதில்!

"இந்து மதம் பதிவு செய்யப்படவில்லையே, அது போலத் தான் நாங்களும்" என்று சொல்கிறாரே! பதிவே செய்யப்படாத அமைப்பு, எப்படி உலகின் மிகப் பெரிய என்.ஜி.ஓ. என்று பிரதமர் சொல்கிறார்? 'குரு தட்சணை' என்ற பெயரில் ஒவ்வோராண்டும் அவ்வமைப்புக்குக் குவியும் பணத்துக்கு ஏது கணக்கு?

**பன்வர் மெக்வன்சி எழுதிய புத்தகத்தில்!**

ஆர்.எஸ்.எஸ்.சில் இயங்கி, பிறகு அதன் சூழ்ச்சிகள், ஜாதிவெறி இவற்றையெல்லாம் அறிந்து வெளியில் வந்து 'நான் இந்துவாக இருக்க முடியாது' என்ற புத்தகத்தை எழுதிய பன்வர் மெக்வன்சி, எந்தக் கணக்கு வழக்கும் இல்லாமல், வங்கி நடைமுறைகள் இல்லாமல், வடநாட்டு பனியாக்களின் மூலம் ஆர்.எஸ்.எஸ்.சுக்குச் சேரும் நிதி எவ்வாறு கையாளப்படுகிறது என்ற தன் அனுபவத்தை எழுதியுள்ளாரே, இது தானே உண்மை நிலைமை?

**ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?**

அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்தும், வெவ்வேறு பெயர்களில் ஆர்.எஸ்.எஸ்.சுக்கு வரும் நிதி குறித்து, முன்பு 'ஃப்ரண்ட்லைன்' உள்ளிட்ட ஏடுகள் அம்பலப்படுத்தியுள்ளனவே! அவற்றையெல்லாம் குறித்து ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் எந்தப் பதிலும் இல்லை என்பதே, ஒன்றிய பா.ஜ.க. அரசின் உள்நோக்கத்தை வெளிப்படுத்துகிறதே! இந்தியாவின் இறையாண்மையைப் பாதிக்கும் வகையில் வெளிநாட்டிலிருந்து எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படக் கூடாது; அந்த நோக்கத்துடன் நிதி வருவதைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டது தான் இந்தச் சட்டமே ஒழிய, வெளிநாடுகளில் இருந்து தொண்டு நிறுவனங்கள் நிதி பெற்று, இந்நாட்டில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு உதவுவதைத் தடுக்கும் நோக்கத்தில் அல்ல.

**நமது வேண்டுகோள்!**

ஆனால், ஒன்றிய பா.ஜ.க. கொண்டு வரும் இந்தத் திருத்த மசோதா, இந்திய இறையாண்மையைக் காப்பதற்கானது அல்ல; முழுக்க முழுக்க ஆர்.எஸ்.எஸ்., அதன் சார்பு அமைப்புகள் தவிர, மற்ற அமைப்புகளை நசுக்கும் நோக்கத்துடனானது; எளிய மக்களைப் பாதிக்கும் நோக்கத்துடனானது. உடனடியாக இச் சட்ட மசோதா வைத் திரும்பப் பெற வேண்டும். எதிர்க்கட்சிகள் மட்டுமல்லாது, பா.ஜ.க. அரசை ஆதரிக்கும் கட்சிகளும், இதனை உணர்ந்து இம் மசோதாவை ஆதரிக்கக் கூடாது என்பதே நமது வேண்டுகோளாகும்.

இவ்வாறு திராவிடக் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை சைதாப்பேட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி 139 அ வட்ட அலுவலகத்தில் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி வட்டச் செயலாளர் சை.மு.சேகர் தலைமையில் சுமதி தீனதயாளன், பூபதி.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர். எம்.எஸ்.ஹரிபாபு, பகுதி அவைத்தலைவர். டி.என்.சிவமணி ஆகியோர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். உடன் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மாதவரம் வடக்கு பகுதி 19 ஆவது வட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். மஞ்சம்பாக்கம் ஆர். பாபு,வி. கார்த்திகேயன், ஜிம் ராஜா, கே.ஏழுமலை,எஸ். உதயகுமார், பி. ஜெயராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் – ஆர்.பாபு முன்னிலையில் –

## மாதவரம் வடக்குப் பகுதி 19வது வட்டத்தில் - கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

### புழல் எம். நாராயணன் பங்கேற்பு!

மாதவரம், ஆக.10-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 19வது வட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாள் கொண்டாடப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 19 வது வட்ட திமுக சார்பில் மாத்தூர் முதல் பிரதான சாலை சந்திப்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப்படத்திற்கு, 19ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில், மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, கலைஞரின் புகழ் ஓங்குக என்று முழக்கமிட்டார்.

இதில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, மாவட்ட பிரதிநிதிகள் வக்கீல் வி. கார்த்திகேயன், ஜிம் கே. ராஜா, மாவட்ட ஆதிதிராவிட நல குழு துணை அமைப்பாளர் கே. ஏழுமலை, மாவட்ட தொழிலாளர் மாவட்ட வர்த்தக அணி துணைப் அமைப்பாளர் பி. ஜெயராஜ், வட்டக் கழக நிர்வாகிகள் ரகுவரன், துளசி, கோவர்த்தனன், கதிரவன், பகுதி மகளிர் அணி அமைப்பாளர் சுகாசினி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ் கண்ணன்,

பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் சரஸ்வதி, அத்திக்குளம் தேவி, கஸ்தூரி, பெரியநாயகி, சுந்தரி, சாய் சந்திப், நந்தகுமார், தனசேகர், பாக ஒருங்கிணைப்பாளர்கள் சின்ன மாத்தூர் குகன், நாகராஜ், லோகன், கங்காதரன், காசி, சோமு, அரசு, கணேசன், வாட்ச் மதிவாணன், சிவப்பிரகாசம், ஜெய்சங்கர், பர்மா நகர் தினேஷ் சங்கர், எஸ். சரவணன் உள்ளிட்ட நிர்வாகிகள் முத்தமிழ் அறிஞரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி நினைவு நாளை அனுசரித்தனர்.

### க.கலைச்செல்வன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

## இராயபுரம் 49வது வட்டத்தில் கலைஞர் நினைவுநாள் நிகழ்ச்சி!

### கழக முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, ஆக.10-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 49வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சஞ்சீவி ராயன் கோவில் தெரு, பாலு தெரு சந்திப்பில் 49 வது வட்டச் செயலாளர் க.கலை செல்வன் ஏற்பாட்டில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் அலங்கரித்து மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செய்யப்பட்டு நலத்திட்ட உதவி வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் ,பொதுக்குழு உறுப்பினர் வே. சிவக்குமார், பகுதி துணைச் செயலாளர்கள் பி.சேகர், கு.சுந்தர், மாவட்டப் பிரதிநிதி எல்.சீனிவாசன், ஏ.வேணுகோபால், சி.லிங்கேசன்,

வட்டக் கழக நிர்வாகிகள் எம். பழனி, அ.குமார், ஜி.கோதண்டன், ஏ.கதிரவன், வி.கலைச்செல்வன், ஆர்.பாரதிதாசன், கே. பாரத், எம்.கன்னியப்பன், ப.மோகனசுந்தரம், தினேஷ் குமார், கே.கிருபாகரன், எஸ்.சேதுராமன், ம.வெ. வேலு, சாம்சங், சின்னசாமி மற்றும் கழகத் தோழர் கலந்து கொண்டனர்.

### திருவல்லிக்கேணி டி.யு.சி.எஸ். தொ.மு.ச. சார்பில்

## முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சி!

### திருவுருவப்படத்திற்கு ராஜன் சாமிநாதன் மலரஞ்சலி!

சென்னை, ஆக.10-

காலம் காலமாக திருவல்லிக்கேணி டி.யு.சி.எஸ்.சங்க அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள்மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சி மட்டுமின்றி பல்வேறு தலைவர்களின் பிறந்த நாள்,நினைவு நாள்,மே திருநாள் என்று தொழிலாளர்கள்சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் நடத்துவது வழக்கம். ஆனால் தற்போதைய த.வெ.க. அரசில் டி.யு.சி.எஸ்.மேலாண்மை இயக்குனர் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் அலுவலக வளாகத்தில் எவ்வித அரசியல் சார்பு மற்றும் சார்பற்ற நிகழ்ச்சிகள் நடத்த அனுமதியில்லை. அனைத்து பணியாளர்களும் மேற்கண்ட அறிவுரையை வழுவாது பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

அவ்வாறு மீறும் பட்சத்தில் தக்க ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற சுற்றறிக்கையைத் தொடர்ந்து, சென்னை திருவல்லிக்கேணி டி.யு.சி.எஸ். தலைமை அலுவலக வெளிப்புறத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வில் அவரது திருவுருவப் படத்திற்கு டி.யு.சி.எஸ். தொ.மு.ச. நிர்வாகிகள் இராஜன் சாமிநாதன், இராஜசேகர், பிரபாகரன் மற்றும் பலர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்!

### நாமக்கல்லில் அமைதிப் பேரணி!

நாமக்கல், ஆக . 10 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8வது ஆண்டு நினைவு நாளையொட்டி, நாமக்கல்லில் அமைதிப் பேரணி நடைபெற்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள அண்ணா சிலையில் இருந்து அமைதிப் பேரணி தொடங்கியது. அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில் நடைபெற்ற இந்த பேரணி, பரமத்தி சாலையில் உள்ள முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்கள் சிலை வரை சென்றனர். பின்னர், கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ. பூபதி, நகர செயலாளர்கள் இராணா ஆர்.ஆனந்த், அ. சிவக்குமார், ஒன்றிய செயலாளர் வி.கே.பழனிவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




சென்னை திருவல்லிக்கேணி டி.யு.சி.எஸ். தலைமை அலுவலக வெளிப்புறத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வில் அவரது திருவுருவப் படத்திற்கு டி.யு.சி.எஸ். தொ.மு.ச. நிர்வாகிகள் இராஜன்.சாமிநாதன், இராஜசேகர், பிரபாகரன் மற்றும் பலர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.